# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2011/2012
## (Repeat- May, 2015)
## ECO/S 2101 Advanced Economic Theory

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

01. (அ) மொத்தப்பயன், எல்லைப்பயன் என்பவற்றை வரைபடத்தின் உதவியுடன் வேறுபடுத்துக.
(08 புள்ளிகள்)

(ஆ) அளவுசார் ஆய்வுக்கும் (Cardinal Utility), வரிசைசார் ஆய்வுக்கும் (Ordinal Utility) இடையிலான வேறுபாட்டை அடையாளப்படுத்துக.
(08 புள்ளிகள்)

(இ) "சமபயன் வளையி ஆய்வானது நுகர்வோன் நடத்தைக் கோட்பாட்டை விளக்குவதற்கு மாத்திரமல்லாது ஏனைய பொருளாதார விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கு பயன்படுகிறது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.
(09 புள்ளிகள்)
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

02. (அ) வருமான நுகர்ச்சி வளைகோட்டிலிருந்து ஏஞ்சல் கோட்டினைத் தருவிக்குக.
(07 புள்ளிகள்)

(ஆ) விலை விளைவு, வருமான விளைவு, பதிலீட்டு விளைவு என்பவற்றிக்கிடையில் காணப்படும் தொடர்பினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.
(08 புள்ளிகள்)

(இ) "விருப்பத் தெரிவினை அடிப்படையாகக்கொண்டு ஒரு பொருளுக்கான கேள்விக் கோடு பெறப்படுகின்றது" என்பதை போல் சாமுவெல்சனுடைய கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
(10 புள்ளிகள்)
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

03. (அ) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.
(08 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தி விரிவுப்பாதை என்றால் என்ன என்பதை விளக்குக.
(07 புள்ளிகள்)

(இ) நீண்டகால உற்பத்திக் கோட்பாட்டினை விளக்கும் விதிகளை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.
(06 புள்ளிகள்)

(உ) பின்வருவன ஒவ்வொன்றும் எவ்வகையான அளவுத்திட்ட விதியை உடையது எனக்காட்டுக.

(i) $Q=20K^{0.6}L^{0.5}$

(ii) $Q=10KL+3K^2+2L^2$

(04 புள்ளிகள்)
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

04. (அ) பொருளியலில் சந்தை என்றால் என்ன? எவ்வாறு ஒரு நிறைபோட்டி சந்தையில் ஒரு நிறுவனத்தினுடைய விலையானது சந்தையினால் தீர்மானிக்கப்படுகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் குறுங்கால சமநிலையை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) ஒரு நிறுவனம் அனுபவிக்கும் அகப்புறச் சிக்கனங்கள் யாவை?

(06 புள்ளிகள்)

(ஈ) தனியுரிமைச் சந்தை அமைப்பொன்றின் பிரதான அம்சங்களை விளக்குக.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

05. (அ) நிலையான செலவு, மாறும் செலவு என்பவற்றை வரைபட ரீதியாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் மொத்தசெலவு தொழிற்பாட்டை கவனத்தில் எடுக்குக.

$TC = 1000+150Q^3+200Q^2$

TFC, TVC, MC, AVC, AFC என்பவற்றைக் காண்க.

(10 புள்ளிகள்)

(இ) நீண்டகால சராசரிச் செலவினை வரைபட உதவியுடன் விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஈ) நவீன செலவுக் கோட்பாடு பற்றி விளக்குக.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

(அ) விலை நெகிழ்ச்சி

(ஆ) விலை பேதப்படுத்தல்

(இ) சமசெலவுக்கோடு

(ஈ) எல்லைதொழிநுட்ப பதிலீட்டு வீதம்

(உ) சமபயன் வளையி

(05 x 05 = 25 புள்ளிகள்)

**************************************